வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 16.05.2026 சனிக்கிழமை இதழ் : 130 பக்கங்கள் : 08

## மாகாண சபைத் தேர்தல் இந்த ஆண்டில் நிச்சயம்!

### அநுர அரசு திட்டவட்ட அறிவிப்பு



கொழும்பு, மே. 16

மாகாண சபைத் தேர்தல் எவ்வித தாமதமுமின்றி இந்த ஆண்டிற்குள்ளேயே நிச்சயமாக நடத்தப்படும் என அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் கிரிஷாந்த அபேசேன தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.


தேர்தல் தாமதப்படுத்தப்படுவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை மறுத்த அமைச்சர், அரசாங்கம் தேர்தலை நடத்துவதில் உறுதியாக இருப்பதாகத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. தேர்தல் தாமதமாவதாக யார் கூறுகிறார்கள்? நாம் சில சவால்களை எதிர் கொள்ள வேண்டியிருந்தது. எனினும், இவ்வருடத்திற்குள்ளேயே தேர்தல் நடத்தப்படும் என்பதில் சந்தேகமில்லை. எனவே பொதுமக்கள் இது குறித்து கவலைப்படத் தேவையில்லை.

தேர்தல் நடத்தப்படும் மாதத்தையோ அல்லது திகதியையோ 07

## கொட்டும் மழைக்கு மத்தியிலும் நேற்று மயிலிட்டியில் போராட்டம்



யாழ்ப்பாணம், மே. 16

வலி. வடக்கு பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தமது காணிகளை விடுவிக்க கோரி, கொட்டும் மழைக்கு மத்தியிலும் காணி உரிமையாளர்கள் இராணுவத்தினரின் அதிகாரிகள் பங்களா முன்பாக நேற்று நான்காவது வெள்ளிக்கிழமையும் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

வலி. வடக்கில் 256, 248, 251 மற்றும் 255 ஆகிய கிராம சேவையாளர் பிரிவை சேர்ந்த மக்கள் கடந்த 1990ஆம் ஆண்டு ஜூன் மாத கால பகுதியில் அவர்களது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட 07

## இழுவை படகு மீன்பிடியை தமிழகத்திலும் தடை செய்யுங்கள்!

### முதல்வர் விஜய்யிடம் அமைச்சர் சந்திரசேகர் கோரிக்கை

கிளிநொச்சி, மே. 16

இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ள அழிவுகரமான "அடிமட்ட இழுவைப் படகு" மீன்பிடி முறையைத் தமிழ்நாட்டிலும் தடை செய்யுமாறு, அந்த மாநிலத்தின் முதலமைச்சர் சி. ஜோசப் விஜய்க்கு கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிளிநொச்சியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்த வேண்டுகோளை முன்வைத்தார்.

இலங்கையில் 2017 ஆம் ஆண்டு முதல் அடிமட்ட இழுவைப் படகு மீன்பிடி முறை சட்டப்பூர்வமாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

இம்முறை கடல் வளங்களுக்கும், பவளப்பாறைகளுக்கும் பாரிய அழிவை ஏற்படுத்துவதாகச் சுட்டிக்காட்டிய அமைச்சர், வடக்கு கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் வகையில் தமிழக முதலமைச்சர் இத்தடையை அமுல் படுத்த வேண்டும் என வலியுறுத்தினார். 07

## யாழ்ப்பாணத்தில் நேற்று கொட்டித் தீர்த்தது மழை!



யாழ்ப்பாணம், மே. 16

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் நேற்று காலை முதல் இடியுடன் கூடிய கனமழை 07

## பொய்யான தரவுகள் அடிப்படையில் கொள்கைகளை வகுக்க வேண்டாம்!

### அரசுக்கு சஜித் பிரேமதாஸ எச்சரிக்கை



கொழும்பு, மே. 16

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிடும் தரவுகள் அனைத்தும் யதார்த்தத்திற்குப் புறம்பானவை என்றும், இவ்வாறான பொய்யான புள்ளிவிவரங்களை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கம் கொள்கைகளை வகுக்கக்கூடாது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார். 07

## பௌத்த அமைச்சின் கீழ் யாழ்.கலாசார நிலையம் தமிழர்களின் அடையாளங்களை அழிக்கும் முயற்சி!

### கஜேந்திரகுமார் எம்.பி. கடும் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே. 16

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களுக்கு என, கலாசார ரீதியாக எந்த ஒரு தனி அடையாளமும் இருக்கக்கூடாது என்ற பேரினவாதத்தின் எண்ணமே யாழ்ப்பாணத் திருவள்ளுவர் கலாசார மத்திய நிலையத்துக்குள் புத்தசாசன அமைச்சு உள்வாங்கப்பட்டமைக்கு பிரதான காரணம் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம், தமிழ் மக்களுக்கென அடையாளமாக கட்டப்பட்ட திருவள்ளுவர் 07

## யுத்தக் குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும்

### ஈ.பி.டி பி. வலியுறுத்து

கொழும்பு, மே. 16

இறுதி யுத்த காலத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் காரணமாக மக்கள் உயிரிழந்தமை விசாரணைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட நிலையில், நீதி விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகச் செயலாளர் பன்னீர்செல்வம் ஸ்ரீகாந் தெரிவித்துள்ளார். 07

## வடமாகாணம் முழுவதும் தொடரும் கட்டுப்பாடற்ற மணல் விலை உயர்வு

### தேசிய கட்டுமானச் சங்கம் கவலை

யாழ்ப்பாணம், மே. 16

வடக்கு மாகாணம் முழுவதும் தொடர்ச்சியாக நிலவி வரும் மணல் பற்றாக்குறை மற்றும் கட்டுப்பாடற்ற மணல் விலை உயர்வு தொடர்பில், இலங்கை தேசிய கட்டுமான சங்கத்தின் வடக்கு மாகாண கிளை, கடும் கவலை வெளியிட்டுள்ளது.

அந்த சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

இந்த விடயம் தொடர்பில், வடக்கு மாகாண ஆளுநர், புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியக தலைவர் மற்றும் அதிகாரிகள், தொடர்புடைய அரச அதிகாரிகளுடன் பல 07

## ஒகஸ்ட் மாதம் வரையும் எரிபொருள் கையிருப்பில்!

கொழும்பு, மே. 16

நாட்டில் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் வரை தேவைப்படும் எரிபொருள் கையிருப்பில் உள்ளதாகவும், இந்த ஆண்டின் எஞ்சிய 07

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை பொருளாதாரத்தை மீட்கும் முயற்சிகளுக்கு முழுமையான ஆதரவு

## சர்வதேச நாணய நிதியம் உறுதி

கொழும்பு, மே. 16

இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார மீட்சிகளுக்கான முயற்சிகளுக்கு தொடர்ந்தும் முழுமையான ஆதரவை வழங்குவதாக சர்வதேச நாணய நிதியம் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் பணிப்பாளர் ஜூலி கோசாக் இவ்விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அண்மைக் காலங்களில் இலங்கை பெரும் பொருளாதார அழுத்தத்தை ஏற்படுத்திய இரண்டு பாரிய அதிர்ச்சிகளை



எதிர்கொண்டுள்ளது.

அவற்றில் முதலாவது "டித்வா" புயல்.

இது இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்திய ஒரு இயற்கை அனர்த்தம்.

இரண்டாவது அதிர்ச்சியாக, மத்திய கிழக்கு போரின் தொடர்ச்சியான தாக்கமாகும்.

இவ்வாறான சவால்களுக்கு மத்தியிலும், இலங்கையின் மக்களும் பொருளாதாரமும் விதிவிலக்கான மீளெழும் திறனை வெளிப்படுத்தியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் சீர்திருத்த வேலைத்திட்டத்தின் கீழான நடவடிக்கைகள் தற்போது பலன் அளிக்கத் தொடங்கியுள்ளது.

அதிகாரிகளின் வலுவான அர்ப்பணிப்பு காரணமாக இலங்கையின் பொருளாதாரச் செயல்பாடு மேம்பட்டு வருகின்றது.

மேலும், இலங்கை அதிகாரிகளுடன் நெருக்கமாகப் பணியாற்றி வருவதுடன், எதிர்காலத்தில் வழங்கக்கூடிய ஆதரவுகள் குறித்து தீர்மானிக்கப்படும். இலங்கைக்கு ஆதரவளிப்பதில் சர்வதேச நாணய நிதியம் தொடர்ந்தும் உறுதியுடன் உள்ளது-என்றார். (அ)

# பேராதனையில் முல்லை மாணவியின் நூல் வெளியீடு




கொழும்பு, மே. 15

முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த பேராதனைப் பல்கலைக் கழக மாணவி எஸ். சுடர் நிலாவின் நூல் வெளியீடு நேற்று முன்தினம் பேராதனைப் பல்கலைக்கழக கருத்தரங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர். ஸ்ரீ.பிரசாந்தன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வாழ்த்துரையினை தமிழ்த்துறை விரிவுரையாளரும் கவிஞருமாகிய திருமதி ஆன் யாழினி சதீஸ்வரன் வழங்கினார்.

மேலும் நூல் அறிமுக உரையை மருத்துவ பீட மாணவன் கவிஞர் மதுமிதனும் நூல் பற்றிய விமர்சன உரையினை மூத்த கவிஞர் முல்லை முஸ்ரிபாவும் வழங்கினர்.

குறித்த நிகழ்வில் விரிவுரையாளர்கள் எழுத்தாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் கல்விச் சமூகத்தினர் எனப் பலரும் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடத்தை இடித்து அகற்ற நல்லூர் சபைக்கு அனுமதி

## அதற்கான செலவை வழங்க உரிமையாளருக்கு உத்தரவு

யாழ்ப்பாணம், மே. 15


யாழ்ப்பாணத்தில் அனுமதியின்றி கட்டடம் கட்டியவருக்கு 30 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிப்பட்டுள்ளதுடன், பிரதேச சபையினால் கட்டடத்தை அகற்றுவதற்காக ஏற்படும் செலவீனத்தை கட்டட உரிமையாளர் பிரதேச சபைக்கு செலுத்தவேண்டும் என யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் நீதிமன்று தீர்ப்பளித்துள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட, பரமேஸ்வரா சந்திக்கு அருகாமையில் வர்த்தக நிலையமொன்றில் மூன்றாம் தளமானது பிரதேச சபையின் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது.

அது தொடர்பில் பிரதேச சபையினால் கடந்த ஜனவரி மாதம் கட்டட உரிமையாளருக்கு எதிராக யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது

வழக்கு விசாரணைகளின் அடிப்படையில் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டத்தின் மூன்றாம் தளத்தினை பிரதேச சபையினால் இடித்து அழிக்க அனுமதியளித்த மன்று, அதற்கான செலவீனத்தை கட்டட உரிமையாளர் பிரதேச சபைக்கு செலுத்தவேண்டும் எனவும், 30 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் செலுத்தவேண்டும் எனவும் மன்று தீர்ப்பளித்துள்ளது. (அ)

# பிக்குகள் தவறிழைப்பார்களாயின் துறவறத்திலிருந்து நீக்கவேண்டும்!



## ஓமல்பே சோபித தேரர் கருத்து

கொழும்பு, மே. 16

தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களின் தராதரம் பார்க்காமல் துறவறத்திலிருந்து நீக்கவேண்டும் என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாராவது தவறு செய்திருந்தால், அவர்களின் தராதரத்தைப் பார்க்காமல் அவர்களை துறவறத்திலிருந்து நீக்க வேண்டும். சாசனச் சீர்திருத்தங்களுக்காக ஒரு தர்ம மாநாடு அவசியமாகும்.

அதேநேரம் மகாநாயக்க தேரர்கள், சங்க நீதிமன்றத்துக்கு அரச அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு விரைவாகச் செயற்படவேண்டும்.

அண்மைக் காலமாக இலங்கைப் பிக்கு சமூகத்தில் சில கவலைக்குரிய சம்பவங்கள் அரங்கேறியுள்ளன. இவற்றைக் காரணம்காட்டி ஒட்டுமொத்த பிக்கு சமூகத்தையும் அவமதிக்கும் நிலை உருவாகியுள்ளது.

ஒருவர் அல்லது இருவர் செய்யும் தவறுகளுக்காக ஒட்டுமொத்த பிக்கு சமூகமும் பொறுப்பேற்க வேண்டிய அவசியமில்லை. அனைத்து பிக்குகளையும் குறை கூறுவதும் தவறாகும்.

அதனால் தவறு செய்பவர்களுக்கு எதிராக தர்மத்தின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இது தொடர்பாக மகாநாயக்க தேரர்கள் அரசாங்கத்திற்கு ஆலோசனைகளை முன்வைத்துள்ளனர். தற்போது அதனை நடைமுறைப்படுத்த வேண்டும்-என்றார். (அ)

# யாழ். மகளிர் விவகாரக் குழுக்களின் சம்மேளன சாதனையாளர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், மே. 16

யாழ் மாவட்ட மகளிர் விவகாரக் குழுக்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மண்டபத்தில் யாழ்ப்பாண மாவட்ட மகளிர் விவகார குழுக்களின் சம்மேளனத் தலைவி நி.மதனரூபி தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஜமுனா ராஜசீலன் மற்றும் யூனியன் கல்லூரி அதிபர் தி.வரதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது 2026 தேசிய மட்ட உதைபந்தாட்ட போட்டியில் வெற்றிபெற்ற வீராங்கனைகள் அரச அதிபரால் பொன்னாடை பூர்த்தி பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்

இந்நிகழ்வில் தெல்லிப்பளை பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சத்தியப்பிரியா, ஏ.வி.ஆர் அறக்கட்டளை தலைவர் சிவகுமார், நலன்விரும்பிகள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

# மோசமான காலநிலையினால் 88 வீடுகள் பகுதியளவில் சேதம்

கொழும்பு, மே. 16

இலங்கையில் நிலவும் மோசமான வானிலை காரணமாக நாடு முழுவதும் 88 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

7 மாவட்டங்களில் இருந்தே வீடுகள் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் மட்டும் 40 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் 25 வீடுகளும் இரத்தினபுரி மாவட்டத்தில் 9 வீடுகளும் காலி மாவட்டத்தில் 5 வீடுகளும் கொழும்பு மாவட்டத்தில் 5 வீடுகளும் மொனராகலை மாவட்டத்தில் 4 வீடுகளும் சேதமடைந்துள்ளன. (அ)

# மரக்கறிகளின் விலை உயரக்கூடும்?

கொழும்பு, மே. 16

நாட்டில் நிலவி வரும் சீரற்ற வானிலை காரணமாக மரக்கறி விநியோக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதோடு, எதிர்வரும் நாள்களில் மரக்கறிகளின் விலைகள் அதிகரிக்கக்கூடும் என வர்த்தகர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போதைய மழைக்கால நிலைமை மேலும் சில நாள்களுக்குத் தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிவிப்பைத் தொடர்ந்து, சந்தைக்கு வரும் மரக்கறிகளின் அளவு குறையக்கூடும் என அஞ்சப்படுகிறது.

பேலியகொடை மெனிங் சந்தை வர்த்தகர் சங்கத்தின் முன்னாள் தலைவர் எஸ்.எம். உபாசேன இது குறித்து கருத்து தெரிவிக்கையில்,

தற்போது ஓரளவு மரக்கறி விநியோகம் உள்ள போதிலும், வரும் நாள்களில் விநியோகத்தில் தட்டுப்பாடு நிலவக்கூடும்.

விநியோகம் குறையும் போது சந்தையில் மரக்கறி விலைகள் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

கடந்த இரண்டு நாள்களாக நிலவும் கடும் மழையினால் மக்கள் சந்தைக்கு வருவது குறைந்துள்ளதோடு, விற்பனை நடவடிக்கைகளும் மந்தகதியில் காணப்படுகின்றன-என்றார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ஊழநாடு
16.05.2026 சனிக்கிழமை
பராபவ வருடம், வைகாசி 02

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# தமிழ்க் கட்சிகளுக்கு பொறுப்புக்கூறும் கடப்பாடு இல்லையா?

போரின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள், போர்க்குற்றங்களுக்கு இலங்கை அரசிடம் பொறுப்புக்கூறும் கடப்பாட்டை வேண்டி நிற்கும் தமிழ் அரசியல் கட்சிகள் சர்வதேச சமூகத்தின் உதவியையும் நாடுகின்றன.

ஆனால், அதேவேளை போரின் முடிவுக்கு பின்னரான காலப் பகுதியில் தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்கான போராட்டத்தை சமகால உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் நிலைவரங்களுக்கு பொருத்தமான முறையில் அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதுவதற்கு விவேகமானதும் நடைமுறைச் சாத்தியமானதுமான கொள்கைகள், அணுகுமுறைகளை கடைப்பிடிக்க இயலாமல் இருப்பதற்காக அதே தமிழ்க் கட்சிகள் தமிழ் மக்களுக்கு பொறுப்புக் கூறவேண்டிய கடப்பாடு தங்களுக்கு இருக்கிறது என்று எப்போதாவது நினைத்துப் பார்த்ததுண்டா என்ற கேள்வியை கேட்க வேண்டியிருக்கிறது.

போர் முடிவுக்கு எதிர்வரும் திங்கட்கிழமையுடன் (மே 18) சரியாக 17 வருடங்கள் நிறைவு பெறுகின்றன. மற்றைய சகல சமூகங்களை விடவும் போரினால் படுமோசமாகப் பாதிக்கப்பட்ட மக்களின் காணி விடுவிப்பு, இராணுவமய நீக்கம், வாழ்வாதாரத் தேடல்கள் போன்ற மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்பதற்கு அரசாங்கங்கள் போதுமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. அது மாத்திரமல்ல, போர் முடிந்த பிறகு தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் இணக்கத் தீர்வொனறைக் காண வேண்டிய அவசியம் இல்லை என்ற எண்ணத்துடனேயே அரசாங்கங்கள் செயற்பட்டு வந்திருக்கின்றன.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இதுகாலவரையில் முன்னெடுக்கப்பட்ட சகல அதிகாரப்பகிர்வு முயற்சிகளையும் எதிர்த்துவந்த கசப்பான வரலாற்றைக் கொண்ட ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி.) தலைமையிலான அரசாங்கமே இன்று பதவியில் இருக்கும் நிலையில், உருப்படியான அரசியல் தீர்வைப் பற்றி மாத்திரமல்ல, தற்போது நடைமுறையில் இருக்கின்ற மாகாண சபைகள் முறைமையின் எதிர்காலம் பற்றியும் கூட நம்பிக்கை வைக்க முடியாத ஒரு நிலையே காணப்படுகிறது.

புதிய அரசியலமைப்பு வரும் வரை மாகாணசபைகள் முறைமை தொடர்ந்து நீடிக்கும் என்று கூறி வந்த ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா வடக்கு, கிழக்கு மக்களுக்கு அதிகாரப்பகிர்வு தேவையில்லை என்று இப்போது கூறுவதை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் கொண்டுவரப்படக்கூடிய அரசியலமைப்பில் உள்ளடக்கப்படக் கூடிய அதிகாரப்பகிர்வு ஏற்பாட்டின் இலட்சணத்தை முன்கூட்டியே புரிந்து கொள்ள முடிகிறது.

போர்க்காலத்தில் இடம்பெற்ற உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடும் சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளையும் மனக்குறைகளையும் பூர்த்திசெய்யக்கூடிய தீர்வொன்றைக் காண வேண்டிய பொறுப்பும் இலங்கை அரசுக்கே உரியது.

ஆனால், போருக்குப் பிறகு கட்டுறுதியான அரசியல் சமுதாயமாக தங்களை முன்னிறுத்துவதில் பாரதூரமான சவால்களை எதிர் கொண்டிருக்கும் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களை உரிய முறையில் வழிநடத்த வேண்டிய பொறுப்பைக் கொண்ட தமிழ்க் கட்சிகள் ஒவ்வொன்றும் மக்களுக்கு ஏற்படக்கூடிய விளைவுகளைப பற்றி பொருட்படுத்தாமல் தான்தோன்றித்தனமாக செயற்படுவதன் காரணத்தினால் தான் அந்த கட்சிகளுக்கு இருக்க வேண்டிய பொறுப்புக்கூறும் கடப்பாடு குறித்து ஈழநாடு நினைவுபடுத்த விரும்புகிறது.

ஒற்றையாட்சிக்குள் ஒன்றும் வேண்டாம் என்று ஒரு தமிழ்க் கட்சி கூறும் ஒற்றையாட்சிக்குள் என்றாலும் தற்போதைய சூழ்நிலையில் மாகாண சபைகளைக் காப்பாற்ற வேண்டும் என்று வேறு சில கட்சிகள் கூறும் திம்புக் கோட்பாட்டின் அடிப்படையில்தான் அரசியல் தீர்வு வேண்டும் என்று சில தமிழ் அரசியல்வாதிகள் கூறுவார்கள் போர்க் குற்றங்களுக்கும் இனவழிப்புக்கும் சர்வதேச நீதியைப் பெறுவதன் மூலம்தான் எதிர்காலத்தில் சிறந்த அரசியல் தீர்வுக்கான வழி பிறக்கும் என்று இன்னொருவர் கூறுவார் கடந்த காலத்தின் நினைவு தான் தமிழ்மக்களின் பேராயுதம் என்று ஒருவர் முழங்குவார்.

இவ்வாறாக ஆளுக்கொரு நிலைப்பாட்டை வெளியிட்டுக் கொண்டிருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் தட்டிக்கேட்க ஆளில்லை என்ற எண்ணத்தில் தாங்கள் எதை வேண்டுமானாலும் பேசிவிட்டுப் போகலாம் என்று நினைக்கிறார்கள் போன்று தெரிகிறது. இவர்களின் இந்த பொறுப்பற்ற செயல்களில் தலையீடு செய்வதில் அக்கறை காட்டக்கூடிய அளவுக்கு வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் பிரக்ஞை போதியளவில் இல்லை என்பது கவலைக்குரிய விடயம்.

தனிநாடு கோரிய வட்டுக்கோட்டை தீர்மானத்தை விடவும் குறைந்த ஒரு தீர்வையும் தமிழர்கள் ஏற்க முடியாது என்று யாழ்ப்பாணத்தில் அரசியல் செய்யும் "சுவாமி" பிரகடனம் செய்கிறார்.அந்த தீர்மானத்தின் பிரகாரம் தீர்வைக்காண வழிமுறை என்னவென்று அவர் கூறுவாரா?

# பாக்கு நீரிணையின் இருபுறமும் உள்ள தமிழ் கட்சிகள் செயல்பட வேண்டிய தருணம்

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான மீனவர் பிரச்சினை இருதரப்பு உறவுகளில் தொடர்ந்து ஒரு நெருடலான விவகாரமாகவே இருந்து வருகிறது. இது இரு அயல் நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திரத்தை மாத்திரமன்றி, இலங்கையின் வடக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தையும் உணர்வுகளையும் நேரடியாகப் பாதிக்கிறது.

இலங்கை இந்தியாவுடன் பொருளாதார ஒத்துழைப்பை ஆழப்படுத்தவும் பிராந்திய ஒருங்கிணைப்பின் மூலம் பலன் பெறவும் முயற்சிக்கும் இன்றைய காலப்பகுதியில் தீர்க்கப்படாத இந்த மீனவர் விவகாரம் பாக்கு நீரிணையின் இரு புறமும் அவநம்பிக்கையை உருவாக்கக்கூடிய ஒரு அரசியல் மற்றும் மனிதாபிமான வெடிப்புப் புள்ளியாக உள்ளது.

இதனால்தான், வடக்கில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகள் இனிமேலும் வெறும் பார்வையாளர்களாக இருக்க முடியாது. இந்த விவகாரத்தில் ஆக்கப்பூர்வமாக தலையிட்டு, நிலையான தீர்வை நோக்கி அழுத்தம் கொடுப்பதற்கான அரசியல் அங்கீகாரமும் தார்மீகப் பொறுப்பும் அவற்றுக்கு உண்டு. இதனால் நேரடியாகப் பாதிக்கப்படுபவர்கள் அவர்களது சொந்த வாக்காளர்களே ஆவர் - அதாவது, முக்கியமாக தமிழ்நாட்டிலிருந்து வரும் இந்திய மீனவர்களின் சட்டவிரோத இழுவைப்படகு மீன்பிடியினாலும் அத்துமீறல்களாலும் வாழ்வாதாரத்தை இழந்து வருபவர்கள் வடக்கு மாகாண மீனவர்களே.

பல தசாப்தங்களாக, போர் காரணமாக வடக்கு மீனவர்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்தனர். அவர்களது கடலுக்கு செல்வது கட்டுப்படுத்தப்பட்டது, மீன்பிடி நேரங்கள் கண்காணிக்கப்பட்டன, கடலோர சமூகங்கள் முழுமையாக இடம் பெயர்ந்தன.

போர் முடிவுக்கு வந்த பிறகு, மீன்பிடி உரிமைகள் மீளப் பெறப்படுவதன் மூலம் பொருளாதார மறுமலர்ச்சி ஏற்படும் என்று இந்த மீனவர்கள் எதிர்பார்த்தனர். ஆனால், அதற்குப் பதிலாக, கடல் எல்லையைத் தாண்டி அதிக எண்ணிக்கையில் வரும் நவீன தொழில்நுட்பம் கொண்ட இந்திய இழுவை படகுகளுடன் அவர்கள் போட்டியிட வேண்டிய சூழல் உருவானது. இந்தப் படகுகள் மீன் வளத்தை அழிப்பது மட்டுமல்லாமல், கடல்சார் சுற்றுச் சூழலையும் இலங்கை தமிழ் மீனவர்களின் வலைகளையும் சேதப்படுத்துகின்றன.

எனவே, இந்தப் பிரச்சினை வெறும் கடல் எல்லைகள் அல்லது கடலில் நடக்கும் கைதுகள் பற்றியது மட்டுமல்ல. இது வடக்கு தமிழ் மக்களின் பொருளாதார இருப்பு மற்றும் போருக்குப் பிந்தைய நீதி பற்றியதாகும்.

துரதிர்ஷ்டவசமாக, இலங்கையில் இந்த விவகாரம் பெரும்பாலும் தேசிய பாதுகாப்பு அல்லது இராஜதந்திரக் கண்ணோட்டத்திலேயே பார்க்கப்படுகிறது. அதேபோல், தமிழ்நாட்டில் இது இலங்கை அதிகாரிகளால் கைது செய்யப்படும் இந்திய மீனவர்கள் தொடர்பான மனிதாபிமானப் பிரச்சனையாக அடிக்கடி அரசியலாக்கப்படுகிறது. இத்தகைய ஒருதலைப்பட்சமான அணுகுமுறைகள் இலங்கையின் வடக்கு தமிழ் மீன்பிடி சமூகங்கள் எதிர்கொள்ளும் பாதிப்புகளை சமச்சீராகப் புரிந்து கொள்வதைத் தடுக்கின்றன.

இன ரீதியான உணர்வுகளையும் பொருளாதார யதார்த்தங்களையும் நன்கு புரிந்துகொண்டவர்கள் என்பதால், வடக்கிலுள்ள தமிழ் அரசியல் கட்சிகள் இந்த இடைவெளியைக் குறைப்பதற்கு தனித்துவமான தகுதியைக் கொண்டுள்ளன. அவர்கள் தமிழ்நாட்டுடன் கலாச்சார மற்றும் அரசியல் தொடர்புகளைப் பேணுகின்ற அதேவேளை, இலங்கைத் தமிழர்களின் அபிலாசைகளையும் குறைபாடுகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள்.

எனவே, அவர்களின் தலையீடு இந்தப் பிரச்சினையை இரு நாடுகளுக்கும் இடையிலான மோதலாகப் பார்க்காமல், பாக்கு நீரிணையின் இருமருங்கிலும் உள்ள தமிழர்களுக்கு இடையிலான ஒரு கூட்டு உரையாடலாக மாற்ற உதவும்.

இருப்பினும், இதுவரை அவர்களின் பங்களிப்பில் ஒரு மூலோபாயத் தீவிரம் காணப்படவில்லை. அத்துமீறி மீன்பிடிப்பதைக் கண்டித்து அவ்வப்போது அறிக்கைகள் வெளியிடப்பட்டாலும், கொழும்பு மற்றும் சென்னை ஆகிய இரு தரப்பினரையும் இரு நாட்டு மீனவ சங்கங்களையும் உள்ளடக்கிய அர்த்தமுள்ள பேச்சுவார்த்தைக்குத் தூண்டும் வகையிலான தொடர்ச்சியான அரசியல் அணிதிரட்டல்கள் முன்னெடுக்கப்படவில்லை.

குறிப்பாக, பொருளாதார நெருக்கடியின் போது வழங்கிய முக்கியமான உதவிகளுக்குப் பிறகு, இந்தியா இலங்கையின் முதன்மையான பிராந்திய பங்காளியாக உருவெடுத்துள்ளது. மீனவர் பிரச்சினை மேலும் நீடிக்க அனுமதிப்பது, விரிவான மூலோபாய ஒத்துழைப்பைக் குலைக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளது.

இந்தச் சூழலில், தமிழ்நாட்டின் பிரபலமான அரசியல் மற்றும் திரையுலக ஆளுமைகளின் பாத்திரமும் முக்கியத்துவம் பெறுகிறது. தமிழ்நாட்டு அரசியலில் அவர்களது கருத்துக்கள் அதிகரித்து வரும் கவனத்தை ஈர்த்து வரும் நிலையில், நடிகர்-அரசியல்வாதி ஜோசப் விஜய் இந்த விவகாரத்தில் ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படலாம்.

தமிழ்நாட்டு அரசியலில் மீனவர் உரிமை என்பது ஒரு உணர்ச்சிகரமான விடயம் என்பதால், இந்திய மீனவர்களின் கவலைகளுக்கு ஆதரவாக அவர் செயல்பட வேண்டும் என்ற அழுத்தம் இயற்கையாகவே இருக்கும்.

அதனால், பெரிய அரசியல் மாற்றத்தை இலக்காகக் கொண்ட தலைவர்கள் இந்தப் பிரச்சினையின் முழுமையான சிக்கலை ஏற்றுக்கொள்ள வேண்டும். விஜய்யோ அல்லது அவரைப் போன்ற பிற அரசியல் பிரமுகர்களோ, இலங்கை தமிழ் மீனவர்களின் பாதிப்புகளைப் பொருட்படுத்தாமல் வெறும் ஜனரஞ்சகமான நிலைப்பாடுகளை எடுத்தால், அது பாக்கு நீரிணையின் இருமருங்கிலும் உள்ள தமிழ் சமூகங்களுக்கு இடையிலான பதற்றத்தை மேலும் அதிகரிக்கும். தமிழ் ஒற்றுமை என்பது ஒரு தரப்பு மீனவர்களைப் பாதுகாக்கும் அதேவேளை, மற்றொரு தமிழ் சமூகம் எதிர்கொள்ளும் பொருளாதார அழிவைப் புறக்கணிப்பதாக இருக்க முடியாது.

இங்குதான் வடக்கு தமிழ் அரசியல் கட்சிகள் முன்கூட்டியே செயல்பட வேண்டிய அவசியம் இருக்கிறது. தமிழ்நாட்டில் தேசியவாத உணர்வுகள் விவாதத்தை ஆதிக்கம் செலுத்த அனுமதிப்பதற்குப் பதிலாக, இலங்கை தமிழ் மீனவர்கள் எதிர்கொள்ளும் யதார்த்தங்களை அவர்கள் நேரடியாகத் தெரியப்படுத்த வேண்டும்.

இழுவைப்படகு மீன்பிடியைப் படிப்படியாக நீக்குதல், இந்திய மீனவர்களுக்கு மாற்று வாழ்வாதார உதவி, கூட்டு மீன்பிடி மேலாண்மை வழிமுறைகள் மற்றும் வலுவான இருதரப்பு அமுலாக்கம் ஆகியவையே நீண்டகால தீர்வாகும். ஆனால் பாதிக்கப்பட்ட சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகள் இந்தச் செயல்பாட்டில் பங்குதாரர்களாக மாறும் வரை இராஜதந்திரம் மட்டும் வெற்றியளிக்காது.

இந்த அரசியல் கட்சிகள் வெறும் பேச்சைக் கடந்து தங்கள் அரசியல் முக்கியத்துவத்தை நிரூபிக்க விரும்பினால், கொழும்பு, புதுடில்லி, சென்னை மற்றும் இருமருங்கிலும் உள்ள மீனவ சமூகங்களுக்கு இடையிலான உரையாடலை முன்னெடுக்கும் செயலூக்கமுள்ள ஒருங்கிணைப்பாளர்களாக அவர்கள் உருவெடுக்க வேண்டும். இல்லையெனில், வறிய தமிழ் மீனவர்கள் பெரும் விலையைக் கொடுத்துக் கொண்டிருக்கும் வேளையில், மீனவர் பிரச்சினை இந்திய - இலங்கை உறவுகளைத் தொடர்ந்து நஞ்சாக்கும்.

**(டெயிலி மிறர் ஆசிரிய தலையங்கம், 15 மே 2026)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மே - 16 சனிக்கிழமை
பராபவ வருடம் - வைகாசி 02
நல்ல நேரம் : 10.30 - 12.30
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : பிரதமை



## இன்றைய ராசிபலன்

**மேடம்** ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**இடபம்** கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் குறையும். உறவினர்களால் சங்கடங்கள் வரும். லேசாக தலை வலிக்கும். முன்னேறும் நாள்.

**மிதுனம்** உங்கள் இலக்குகளை நோக்கி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**கடகம்** எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலைக்கு தகுந்தார் போல் பொறுப்பாக இருப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். முயற்சிகள் பலிதமாகும்.

**சிம்மம்** குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். புதிய பாதை தெரியும் நாள்.

**கன்னி** சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத சின்னச் சின்ன கவலைகள் வந்து போகும். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. பொறுமை தேவைப்படும் நாள்.

**துலாம்** தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்தியோகத்தில் புது சலுகைகள் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**விருட்சிகம்** பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்கள் நண்பர்கள் உங்களை ஆலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். அமோகமான நாள்.

**தனுசு** குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தில் புது தொடர்புகள் கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**மகரம்** எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். புதிய வேலை கிடைக்கும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**கும்பம்** குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். தைரியும் கூடும் நாள்.

**மீனம்** கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். தோற்றப் பொலிவு கூடும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

# ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் யாழில் தான் காணி பிரச்னைகள் குறைவு

## அரசாங்க அதிபர் பிரதீபன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 16

யாழ்ப்பாணம் மாவட்டத்தை பொறுத்தவரை ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் அரச காணிகள் குறைவாக காணப்படுவதால் காணி தொடர்பான பிரச்னைகள் குறைவாக காணப்படுகின்றன என்று அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

மேலும், மாகாண காணி திணைக்களத்தின் கீழ் பிரதேச செயலங்களில் கடமையாற்றும் ஆளணியை ஒழுங்குபடுத்த வேண்டிய தேவை காணப்படுவதாகவும், அதனை மீள் ஒழுங்கு செய்யுமாறு மாகாண காணி ஆணையாளர் அவர்களை கேட்டுக்கொண்டார். மேலும், தற்போது ஹிமிகம திட்டத்தின் மூலம் காணி ஆவணங்களை வழங்குவதனை விரைவுபடுத்துமாறும், பிரதேச ரீதியாக காணி தொடர்பான பிரச்சினைகள் ஏற்படும் போது அதற்கான இறுதியான தீர்மானத்தை பிரதேச செயலாளர்கள் எடுக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். மக்களின் தேவைகளை சரியான வகையில் காணி உத்தியோகத்தர்கள் அடையாளம் கண்டு பிரதேச செயலாளர்களுக்கு தெரியப்படுத்தி சரியான தீர்மானங்கள் எடுப்பதற்கு வழியை ஏற்படுத்துமாறும் தெரிவித்ததுடன், வினைத்திறனாக செயல்பட்டு மாவட்ட காணி தொடர்பான பிரச்னைகளை தீர்ப்பதற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொண்டார்.

மேலும், பின்வரும் அறிவுறுத்தல்களும் அரசாங்க அதிபரால் வழங்கப்பட்டன.

01. ஜூன் இறுதி வாரத்திற்குள் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தீர்வு காணப்பட வேண்டிய காணி தொடர்பான பிரச்னைகளை சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள் மற்றும் காணி சம்பந்தப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களும் இணைந்து கலந்துரையாடி தீர்வு காண வேண்டும்.

02.ஜூன் 25 ஆம் திகதி மாவட்ட காணி பயன்பாட்டுக் குழு கூட்டம் நடைபெறவுள்ளதால் அதற்கு முன்னதாக பிரதேச காணி பயன்பாட்டுக்குழு கூட்டத்தை நடத்தி எடுக்கப்பட்ட தீர்மானங்களை மாவட்டச் செயலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் தெரிவித்தார்.

03.டிசெம்பர் மாதத்துக்கு முன்னதாக யாழ்ப்பாணம் மாவட்டத்தின் காணி தொடர்பான நடமாடும் சேவை ஒன்றினை மருதங்கேணி பிரதேச செயலகத்தில் நடத்த ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்.

04.பிரதேச செயலகங்களில் காணி அளவீடுகளை மேற்கொள்ள நில அளவைத் திணைக்களத்திடம் முனவைக்கும் போது முன்னுரிமை அடிப்படையில் நில அளவைத் திணைக்களம் காணி அளவீடுகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்.

அரச காணி வேலைத் திட்டம் தொடர்பான முன்னேற்ற மீளாய்வு கூட்டம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில், மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# அரச காணி வேலைத்திட்ட முன்னேற்றம்: யாழ்ப்பாணத்தில் விசேட மீளாய்வு கூட்டம்



யாழ்ப்பாணம், மே 16

அரச காணி வேலைத் திட்டம் தொடர்பான முன்னேற்ற மீளாய்வு கூட்டம் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில், வட மாகாண காணி ஆணையாளர் ஆர். குருபரனின் பங்குபற்றுதலுடன் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்டத்தில் காணி ஆணையாளர் திணைக்களத்தின் ஊடாக மேற்கொள்ள வேண்டிய காணிச் செயல்பாடுகள், காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் கீழ் காணிக் கச்சேரி மூலம் ஆவணங்கள் வழங்கப்பட வேண்டிய காணிகள், அரச காணியினை வர்த்தக நோக்குடன் கூடிய விவசாய நடவடிக்கைகளுக்காக நீண்ட கால குத்தகைக்கு வழங்கும் காணிகள், பிரதேச சபை ஆளுகைக்கு உட்பட்ட இதுவரை கையளிக்கப்படாத காணிகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) பா. ஜெயகரன், நில அளவைகள் திணைக்கள அத்தியட்சகர் எஸ். பிறேமதாஸ், வட மாகாண உதவி காணி ஆணையாளர் ரி.விதுஷா, பிரதேச செயலாளர்கள், மாகாண காணி ஆணையாளர் திணைக்கள உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக காணி உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக காணி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (எ)

# காணி உரிமை சட்டங்கள் குறித்து மன்னார் முசலியில் செயலமர்வு

மன்னார், மே 16

சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் மன்னார் முசலிப் பிரதேசத்தில் காணி உரிமைச் சட்டங்கள் மற்றும் அரச காணி முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அதிக முக்கியத்துவம் பெற்று வரும் காணி தொடர்பான சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் நிர்வாக செயல்முறைகள் குறித்து சிவில் சமூகங்கள் மற்றும் பொதுமக்களுக்கு தெளிவூட்டும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தின் முசலிப் பிரதேசத்தில் செயல்பட்டு வரும் சிவில் சமூக அமைப்புகள், சமூக அடிப்படையிலான அமைப்புகள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் அமைப்புகள், கிராம மட்ட பிரதிநிதிகள், காணி பிரச்னைகளால் பாதிக்கப்பட்டவர்கள், காணி உரிமைக்காக விண்ணப்பித்தவர்கள், பலவந்தமாக காணிகளை இழந்தவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் இந்தச் செயலமர்வில் பங்கேற்று பயனடைந்தனர். (எ)

# மன்னாரில் காணி தொடர்பில் இலவச ஆலோசனை முகாம்

## பாதிக்கப்பட்ட பலர் பங்கேற்பு

மன்னார், மே 16

மன்னாரில் காணி தொடர்பான இலவச ஆலோசனை முகாம் புதன் மற்றும் வியாழன் ஆகிய இரு தினங்கள் மன்னாரில் உள்ள சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தில் நடைபெற்றது.

காணி தொடர்பான சட்ட மற்றும் நிர்வாக ஆலோசகர் ஓய்வு பெற்ற உதவி காணி ஆணையாளர் க. குருநாதன் இலவச ஆலோசனைகளை வழங்கினார்.

இதன்போது காணி கொள்வனவு, காணி விற்பனை, தனியார் காணி ஆவணங்கள், அரச காணி ஆவணங்கள், லீஸ் காணி தொடர்பான விடயங்கள் புதிய காணிக்கான விண்ணப்ப நடைமுறைகள் காணி விற்பனையின் போது கவனிக்க வேண்டிய விடயங்கள், காணி தொடர்பான ஏனைய சட்ட மற்றும் நிர்வாக விடயங்கள் தொடர்பான ஆலோசனைகளை வழங்கினார்.

இதன்போது குறித்த இரு தினங்களும் காணி விடயங்களால் பாதிக்கப்பட்ட பலர் கலந்து கொண்டு ஆலோசனைகளை பெற்றுக்கொண்டனர்.

இதில், சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ மற்றும் பணியாளர்களும் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மருந்து பொருட்களின் விலைகளை 25 சதவீதம் அதிகரிக்க கோரிக்கை

கொழும்பு, மே 16

இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் மற்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மருந்துப் பொருட்களின் விலைகளை 25 சதவீதத்திலாவது அதிகரிக்குமாறு மருந்து நிறுவனங்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளன.

மின்சாரக் கட்டண அதிகரிப்பு, ரூபாய்க்கு நிகரான டொலரின் பெறுமதி உயர்வு, கப்பல் கட்டணங்கள் மற்றும் மருந்து உற்பத்தி மூலப்பொருட்களின் விலையேற்றம் உள்ளிட்ட அனைத்துச் செலவுகளையும் கருத்திற்கொண்டு இந்த விலை அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டியுள்ளதாக அந்த நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இது தொடர்பில் உள்நாட்டு மருந்து உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் நலின் கன்னங்கர தெரிவிக்கையில்,

மருந்து உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்களின் விலைகள் பெருமளவில் அதிகரித்துள்ளதால், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மருந்துகளின் விலைகளை அத்தியாவசியமாக உயர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை மருந்துத் தொழில்துறை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் சாந்த பண்டார குறிப்பிடுகையில், தற்போது அரசாங்கத்தின் விலைக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள 60 மருந்து வகைகளுக்கான கட்டுப்பாட்டை நீக்கி, அவற்றின் விலைகளை ஆகக்குறைந்தது 7 சதவீதத்தாலாவது அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கை நோயாளர்களுக்குத் தேவையான சுமார் 1800 மருந்து வகைகள் இறக்குமதி செய்யப்படுவதுடன், சுமார் 250 வகைகள் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. நாட்டில் 13 உள்நாட்டு மருந்து உற்பத்தி நிறுவனங்கள் இயங்கி வரும் நிலையில், எரிபொருள் மற்றும் மின்சாரக் கட்டண உயர்வு காரணமாக தற்போதைய விலையில் மருந்துகளை உற்பத்தி செய்து சந்தைக்கு விநியோகிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்தனர்.

(எ)

# ஊழல் மோசடிகள் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கை துரிதம்

கொழும்பு, மே 16

விதிமுறைக்கு அமையவே விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. சட்டத்தை எவரும் கையில் எடுக்க முடியாது. முன்னைய ஆட்சியாளர்கள் செய்த ஊழல்கள் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகள் தற்போது துரிதப்படுத்தப்பட்டுள்ளன. எமது அரசாங்கத்தில் எவருக்கும் சட்டத்திலிருந்து தப்பிச் செல்ல முடியாது என்று வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்க்கட்சியினர் இன்று பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர். குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வாக்குமூலம் அளிக்க சென்றமை குறித்து பேசப்படுகிறது. எயார்பஸ் கொடுக்கல்- வாங்கல் விவகாரத்தில் கபில சந்திரசேனவிடமிருந்து பணம் பெற்றுக்கொண்டதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பிலேயே அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டது. இதனை விசாரணை படிமுறைகளின் ஒரு அங்கமாகவே பார்க்க வேண்டும். நீதிமன்றச் செயல்முறை ஒன்றின் நடுப்பகுதியில் சாட்சியங்களை உறுதிப்படுத்துவதுக்கு இவ்வாறான வாக்குமூலங்கள் பெறப்படுவது வழமையாகும்.- என்றார்.

(எ)

# நாடு முழுவதும் விசேட சோதனை நடவடிக்கை சட்டவிரோத மதுபானங்களுடன் ஐவர் கைது!

கொழும்பு, மே 16

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளின்போது, சட்டவிரோத மதுபானம் மற்றும் கோடாவுடன் ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி ராகமை - பொடிவீகும்புர பகுதியில், வலான மத்திய ஊழல் ஒழிப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சட்டவிரோத மதுபானத்துடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, சந்தேக நபரிடமிருந்து 225 லீற்றர் (300 போத்தல்கள்) சட்டவிரோத மதுபானம் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, தங்கொட்டுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வயிக்காலை பகுதியில் பாரிய அளவிலான சட்டவிரோத மதுபானத்துடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, சந்தேக நபர்களிடமிருந்து 1620 லீற்றர் (08 பீப்பாய்கள்) கோடா மற்றும் மதுபானம் காய்ச்சுவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபர்கள் வயிக்காலை பகுதியைச் சேர்ந்த 38 மற்றும் 42 வயதுடையவர்கள் என தெரியவந்துள்ளது.

அதேநேரம் மாரவில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இஹல குடாவெவ பகுதியில் சட்டவிரோத மதுபானத்துடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வலான மத்திய ஊழல் ஒழிப்புப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட சோதனையின்போதே இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இதன்போது சந்தேக நபரிடமிருந்து 75 லீற்றர் (100 போத்தல்கள்) சட்டவிரோத மதுபானம் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும் பல்லேவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வல்போலான பகுதியில் சட்டவிரோத மதுபானத்துடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது சந்தேக நபரிடமிருந்து 72 லீற்றர் (96 போத்தல்கள்) சட்டவிரோத மதுபானம் கைப்பற்றப்பட்டுள்ளது.

(எ)

# மின்சார சபையிலிருந்து விலகிய 1898 ஊழியர்களுக்கு நஷ்டஈடு

கொழும்பு, மே 16

இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கும் போது சுயவிருப்பத்தின் அடிப்படையில் சேவையில் இருந்து விலகிய 1898 ஊழியர்களுக்கு நேற்று நஷ்டஈடு வழங்கப்பட்டது.

நஷ்டஈடு வழங்கலுக்காக 8.5 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்று வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

வலுசக்தி அமைச்சர் அநுர கருணாதிலக கூறுகையில்,

இலங்கை மின்சார சபையை நிறுவன அலகாக வேறுபடுத்தியதால் இன்று வினைத்திறனான வகையில் சேவை வழங்கல் முன்னெடுக்கப்படுகிறது. மின்சார சபையின் உள்ளக முரண்பாடுகளினால் பொதுமக்கள் பாதிக்கப்பட வேண்டிய நிலைமை தற்போது கிடையாது.

தான்தோன்றித்தனமான வகையில் மறுசீரமைப்பு பணிகளை முன்னெடுக்கவில்லை. சட்டத்துக்கு அமைவாகவே மறுசீரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டன. எவரது தொழில் உரிமைகளையும் அரசாங்கம் பறிக்கவில்லை. மின்சார சபையின் 12 ஆயிரம் ஊழியர்களின் தொழில் உரிமைகளை பாதுகாத்துள்ளோம்- என்றார்.

(எ)

# அவிசாவளையில் அதிக மழை வீழ்ச்சி

கொழும்பு, மே 16

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக நேற்று அதிகாலை 5 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் அதிகூடிய மழைவீழ்ச்சி அவிசாவளை பகுதியில் பதிவாகியுள்ளது.

குறித்த காலப்பகுதியில் அங்கு 180 மில்லி மீற்றர் அளவில் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக நீர்ப்பாசனப் பணிப்பாளர் எல்.எஸ். சூரியபண்டார தெரிவித்தார்.

இதேநேரம் ஹங்வெல்ல பகுதியில் 158 மில்லி மீற்றர் அளவிலும், தெரணியகலை பகுதியில் 122 மில்லி மீற்றர் அளவிலும் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் இரவு முதல் களனி கங்கையின் நீர்மட்டம் அதிகரித்த போதிலும், அது இதுவரை எச்சரிக்கை மட்டத்தை அடையவில்லை என அவர் கூறினார்.

அதேபோல், அத்தனகலு ஓயாவின் தூனமலே அளவீட்டு நிலையப் பகுதியிலும் அதனைச் சூழவுள்ள இடங்களிலும் 176 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

(எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இனப்படுகொலைகளுக்கு நீதி வேண்டும்: சர்வதேசம் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## சிறிநாத் எம். பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு, மே 16

தமிழ் மக்கள் மீதான படுகொலைகளுக்கு நீதி நியாயம் கிடைக்க வேண்டும் என்பதை சர்வதேச சமூகத்திடமும் இந்த அரசிடமும் கேட்டுக்கொள்கின்றேன் என்று இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினா இ.சிறிநாத் தெரிவித்தார்.

தமிழின படுகொலை வாரமான முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் நான்காவது நாளான வியாழக்கிழமை கொட்டும் மழையிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு கல்லடி, உப்போடை சிவானந்தாதேசிய பாடசாலைக்கு முன்பாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வும் கஞ்சி வழங்கலும் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்,

உண்மையிலே நான் இந்த கிழக்கு இலங்கை இந்து குருமார் ஒன்றியத்திற்கும், அக்கரைப்பற்று பிரதேசத்திற்குரிய இந்து குருமார் ஒன்றியத்திற்கும் நன்றிகளை கூறிக்கொள்கின்றேன்.

உணர்வுபூர்வமாக தங்களுடைய சமய பணிகளுக்கு அப்பால் தமிழ் மக்களின் தேசிய விடுதலைக்காக அவர்களுடைய சேவையை பாராட்டுவதோடு, உண்மையாக அவர்களுடைய தன்னார்வ செயல்களுக்கு என்னுடைய அனுசரணையையும் ஒத்துழைப்பையும் வழங்கி அவர்களோடு பயணிப்பேன் என்ற உறுதிமொழியை கூறிக்கொண்டு, தமிழ் மக்களுக்கான நீதி நியாயம் கிடைக்க வேண்டும் என்று சர்வதேச சமூகத்திடமும் இந்த அரசிடமும் கேட்டுக்கொள்கின்றேன்- என்றார். (எ)

# சாரதியை தாக்கிவிட்டு கடற்கரையில் கைவிடப்பட்ட ஓட்டோ: இருவர் கைது

திருகோணமலை, மே 16

மூதூர் தக்வா நகர் “பெந்திஸ் அடி” என அழைக்கப்படும் கடற்கரைப் பகுதியில், பச்சை நிற ஓட்டோ ஒன்று நள்ளிரவு இனந்தெரியாத நபர்களால் கைவிடப்பட்ட நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இதனை அவதானித்து சந்தேகமடைந்த மீனவர்கள், மூதூர் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதைத் தொடர்ந்து, பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில், திருகோணமலையைச் சேர்ந்தவருக்கு சொந்தமான குறித்த ஓட்டோ, இரவு வேளையில் சவாரிக்காக மூவரை ஏற்றிக்கொண்டு தம்பலகாமம் நோக்கிச் சென்றபோது, இடைநடுவில் மர்ம பயணிகளால் சாரதி தாக்கப்பட்டு வயல் பகுதியில் வீசப்பட்ட நிலையில், ஓட்டோ கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

மேலும், குறித்த ஓட்டோவில் சாரதியின் அனுமதிப்பத்திரம் மற்றும் சில பண நோட்டுகள் காணப்பட்டதாகவும், சந்தேகத்துக்கிடமான எந்தவொரு பொருளும் மீட்கப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனுடன், ஓட்டோவில் பயணித்த மர்ம நபர்களில் இருவர் நேற்று அதிகாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ)

# 21 பிரதான நீர்த்தேக்கங்கள் வான் பாய்வதாக அறிவிப்பு

கொழும்பு, மே 16

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுள்ள 21 பிரதான நீர்த்தேக்கங்களும், 19இற்கும் மேற்பட்ட நடுத்தர அளவிலான நீர்த்தேக்கங்களும் தற்போது வான்பாய்கின்றன.

நீர்ப்பாசன பணிப்பாளர் எஸ்.டி ஹேரத் கூறுகையில், நேற்றுக் காலை 6.00 மணி நிலவரப்படி இந்த நிலைமை பதிவாகியுள்ளது.

அநுராதபுரம் மாவட்டம்: ராஜாங்கனை, நாச்சிதூவ மற்றும் யாண் ஓயா நீர்த்தேக்கம்.

பதுளை மாவட்டம்: அம்பேவெல நீர்த்தேக்கம்.

அம்பாந்தோட்டை மாவட்டம்: லுணுகம்வெஹெர, திஸ்ஸ வாவி, வீரவில யோத வாவி மற்றும் வெஹெரகல நீர்த்தேக்கம்.

குருநாகல் மாவட்டம்: அம்பகொல வாவி, உஸ்கல சியம்பலன்கமுவ, மெதியாய, மாகல்ல மற்றும் தெதுரு ஓயா நீர்த்தேக்கம்.

கண்டி மாவட்டம்: நாலந்தா மற்றும் வாமடில்ல நீர்த்தேக்கங்கள்.

மொனராகலை மாவட்டம்: ஹதபானகல மற்றும் அலிகொடஆர நீர்த்தேக்கங்கள்.

புத்தளம் மாவட்டம்: இகினிமிட்டிய மற்றும் தப்போவ நீர்த்தேக்கங்கள்.

மன்னார் மாவட்டம்: யோத வாவி.

அதேநேரம் நேற்று காலை 6.00 மணியளவில் ராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் 2 வான் கதவுகள் தலா 3 அடி வீதம் திறக்கப்பட்டு, விநாடிக்கு 1600 கன அடிக்கும் அதிகமான நீர் கலா ஓயாவிற்கு திறந்து விடப்படுகிறது.

லுணுகம்வெஹெர நீர்த்தேக்கத்தின் 6 வான் கதவுகள் தலா 4 அங்குலம் வீதம் திறக்கப்பட்டு, விநாடிக்கு 1740 கன அடி நீர் கிரிந்தி ஓயாவிற்கு திறந்து விடப்பட்டுள்ளது.

வெஹெரகல நீர்த்தேக்கத்தின் 6 வான் கதவுகள் தலா 3 அங்குலம் வீதம் திறக்கப்பட்டு, விநாடிக்கு 700 கன அடி நீர் மாணிக்க கங்கைக்கு திறந்து விடப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அலிகொடஆர நீர்த்தேக்கத்தின் 3 வான் கதவுகள் தலா 3 அடி வீதம் திறக்கப்பட்டு, விநாடிக்கு 680 கன அடி நீர் கிரிந்தி ஓயாவிற்கு திறந்து விடப்படுகிறது.

யாண் ஓயா நீர்த்தேக்கத்தின் 3 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. ஒரு கதவு 6 அங்குலமாகவும், ஏனைய இரண்டு கதவுகள் தலா 4 அங்குலம் வீதமும் திறக்கப்பட்டுள்ளன.

தப்போவ நீர்த்தேக்கத்தின் 12 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என்று நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

# தாழ்நிலப் பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை

கொழும்பு, மே 16

அத்தனகலு ஓயா மற்றும் ஊறுவல் ஓயா பள்ளத்தாக்குகளின் தாழ்நிலப் பகுதிகளில் சில இடங்களில் சிறியளவிலான வெள்ள நிலை ஏற்படும் அபாயம் இருப்பதாக நீர்பாசனத் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்தனகலு ஓயா வடிநிலப் பகுதிகளில் கடந்த சில மணித்தியாலங்களில் பெய்த கணிசமான மழைவீழ்ச்சி மற்றும் நீர்மட்ட அவதானிப்புகளின் அடிப்படையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வத்தளை, திவுலபிட்டிய, மீரிகம, அத்தனகல்ல, மஹர, கம்பஹா, மினுவாங்கொடை, ஜா-எல மற்றும் கடான ஆகிய தாழ்நிலப் பகுதிகளில் வசிப்போர் வெள்ள அபாயம் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ)

# ஏறாவூரில் கைக்குண்டு மீட்பு

மட்டக்களப்பு, மே 16

ஏறாவூர் ஐயங்கேணி பகுதியில் நீர் தேங்கி நிற்கும் இடமொன்றில் பழுதடைந்த நிலையில் கைவிடப்பட்டிருந்த கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நீதிமன்ற உத்தரவை பெற்று, குறித்த கைக்குண்டை பாதுகாப்பான முறையில் வெடிக்க வைப்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் தற்போது மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# ஜனாதிபதி தலைமையில் பதுளையில் விசேட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

பதுளை, மே 16

“டித்வா” சூறாவளியினால் பாதிக்கப்பட்ட பதுளை மாவட்ட மக்களின் இயல்பு வாழ்க்கையை வழமைக்கு கொண்டு வருவதற்கும், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து ஆராயும் பதுளை மாவட்ட விசேட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம், ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையில் பதுளை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

அனர்த்த நிலைமையினால் பதுளை மாவட்டத்தில் 26,517 குடும்பங்களைச் சேர்ந்த 90,667 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 77 தோட்ட வீடுகளும் 507 கிராமிய வீடுகளும் முழுமையாகச் சேதமடைந்துள்ளன. அதிக ஆபத்துள்ள வீடுகளாக 1376 தோட்ட வீடுகளும் 1474 கிராமிய வீடுகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன்படி, பதுளை மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட வேண்டிய மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை 3434 ஆகும். அந்த மக்களை மீள்குடியேற்றும் செயல்முறை மற்றும் அதில் எழுந்துள்ள பிரச்னைகள் குறித்து ஜனாதிபதி இங்கு பிரதேச செயலக பிரிவுகளின் அடிப்படையில் தனித்தனியாகக் கேட்டறிந்தார்.

மீள்குடியேற்றத்திற்காக முன்மொழியப்பட்ட, தற்போது தனியார் நிறுவனங்களின் வசம் உள்ள அரச காணிகளை விரைவாக விடுவிப்பது குறித்து இங்கு விசேடமாக ஆராயப்பட்டதுடன், அக்காணிகளை வழங்குவது தொடர்பாக நிறுவனங்களுக்கு இடையே உடன்பாடு எட்டப்பட்டவுடன் வீட்டு நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

மீள்குடியேற்ற செயல்முறையை விரைவுபடுத்த வேண்டியதன் அவசியத்தை இங்கு மேலும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அறிக்கைகள் மற்றும் திட்டங்களுக்கு அப்பால் சென்று, வீடுகளை இழந்த மக்களுக்கு ஒரு புதிய வீட்டின் உரிமை குறித்த நம்பிக்கையை உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

மீள்குடியேற்றத்தின் போது வேறு காணிக்குச் செல்வது குறித்து தயக்கத்தில் இருப்பவர்களுக்கு அது தொடர்பில் முடிவெடுப்பதற்காக, அதிகபட்சமாக ஜூன் 15 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்குமாறும் ஜனாதிபதி இங்கு அறிவுறுத்தினார்.

மேலும், பதுளை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொடுப்பனவுகளை வழங்குதலின் முன்னேற்றம், வாழ்வாதார இழப்புகளுக்கான இழப்பீடு வழங்குதல், சிறு மற்றும் நடுத்தர அளவிலான வணிகத் தலங்களுக்கான இழப்பீடுகள் வழங்குதல், வீட்டு வாடகை செலுத்துதல் மற்றும் உயிரிழப்புகளுக்கான இழப்பீடுகளை வழங்குதல் ஆகியவற்றின் முன்னேற்றங்கள் குறித்தும் ஜனாதிபதி தனித்தனியாகக் கேட்டறிந்தார்.

“டித்வா” அனர்த்த நிலைமையினால் வயல் நிலங்கள் மற்றும் பயிர்ச் செய்கை நிலங்களில் தேங்கியுள்ள மணல் மற்றும் கற்களை அகற்றும் செயல்முறை குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டதுடன், அதற்காக ஒரு ஏக்கருக்கு 25,000 ரூபாய் கொடுப்பனவை வழங்குவதற்கும், விவசாய அமைப்புகளின் பங்களிப்புடன் அந்த வேலைத்திட்டத்தை செயல்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. (எ)

# மா ஓயாவின் நீர்மட்டம் உயர்வு

கொழும்பு, மே 16

கிரியுல்ல பகுதியில் பதிவான 172 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி காரணமாக மா ஓயாவின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளது.

இதன்படி கிரியுல்ல மற்றும் பாதல்ஹம பகுதிகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ள போதிலும், அது இதுவரை வெள்ளப் பெருக்கு நிலையை அடையவில்லை.

மேலும் கிங் கங்கை, நில்வலா கங்கை மற்றும் களுகங்கை ஆகிய பகுதிகளுக்கு இடைப்பட்ட பகுதிகளில் 50 மில்லி மீற்றர் முதல் 100 மில்லி மீற்றர் வரையிலான மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது.

ஒட்டுமொத்தமாக நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பலத்த மழை பெய்துள்ளது. பல ஆற்றுப் பள்ளத்தாக்குகளின் நீர்மட்டங்கள் கணிசமாக உயர்ந்துள்ளன.

இன்றும் ஈரவலயப் பகுதிகளில் மழை பெய்யும் சாத்தியக் கூறுகள் காணப்படுவதால், ஆறுகளை அண்டிய மற்றும் தாழ்நிலப்பகுதிகளில் வாழும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று அனர்த்த முகாமைத்துவ பொறியியலாளர் எல்.எஸ். சூரியபண்டார அறிவுறுத்தினார். (எ)

# சுற்றுலாத் தலங்களுக்கு வருகை தரும் காதலர்களை அச்சுறுத்திய இருவர் கைது

பதுளை, மே 16

எல்ல சுற்றுலாத் தலங்களுக்கு வருகை தரும் இளம் காதலர்களுக்கு எதிராக பல்வேறு குற்றங்களை இழைத்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எல்ல பொலிஸ் நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது, ஹாலி-எல பகுதியைச் சேர்ந்த 33 மற்றும் 28 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் ஒரு சந்தேகநபர், ஒரு இளம் ஜோடியை அச்சுறுத்தி, அங்கிருந்த யுவதியை காட்டுப் பகுதிக்கு அழைத்துச் சென்று பாலியல் வன்புணர்வு செய்ததோடு, மற்றுமொரு ஜோடியிடமிருந்து சுமார் ஐந்து இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க ஆபரணங்களையும் கொள்ளையடித்துள்ளார்.

அத்துடன், மேலும் பல ஜோடிகளிடமிருந்து தொலைபேசிகள் மற்றும் பல்வேறு சொத்துக்களை இவர்கள் கொள்ளையடித்தமை முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் பண்டாரவளை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கொட்டும் மழைக்கு...

பின்னர், அப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக காணப்படுகிறது.

யுத்தம் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்த நிலையிலும் , அப்பகுதிகளில் இருந்து பாதுகாப்புத் தரப்பினர் வெளியேறாத நிலையில், அவை உயர்பாதுகாப்பு வலயமாகவே காணப்படுகிறன.

இந்நிலையில் தமது 651 ஏக்கர் வரையிலான காணிகளை விடுவிக்குமாறு பல வருடங்களாக காணி உரிமையாளர்கள் போராடி வருகின்றனர். ஆயினும் காணிகள் விடுவிக்கப்படவில்லை. காணிகளை விடுவிக்குமாறு பிரதி வெள்ளிக்கிழமை களில் போராட்டங்களை முன்னெடுப்பதாக காணி உரிமையாளர்கள் முடிவெடுத்திருந்த நிலையில், நேற்று 4ஆவது வெள்ளிக்கிழமையும் போராட்டத்தை முன்னடுத்தனர். (அ)

## மாகாண சபைத்...

எம்மால் தற்போது துல்லியமாகக் கூற முடியாது-என்றார்.

காலக்கெடுவை நிர்ணயிக்க முடியாவிட்டாலும், 2026 ஆம் ஆண்டிற்குள் தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியான நிலையில் இருப்பதாகவும் அவர் மேலும் வலியுறுத்தினார். (அ)

## யாழ்ப்பாணத்தில்...

பெய்தது. குறிப்பாக நகரப் பகுதிகள் மற்றும் தாழ்வான பகுதிகளில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

நெடுந்தீவு, நல்லூர், யாழ்ப்பாண நகரப்பகுதி உள்ளிட்ட பல இடங்களில் பலத்த காற்று மற்றும் மின்னலுடன் மழை பெய்ததாக தெரிவிக்கப்பட்டது.

சில பகுதிகளில் வீதிகளில் மழைநீர் தேங்கியதுடன், வாகனப் போக்குவரத்தும் மந்தமடைந்தது.

இதனால் காலை நேரப் பணிகளுக்காக வீடுகளை விட்டு வெளியேறிய மக்கள் மற்றும் மாணவர்கள் சிரமங்களை எதிர்கொண்டனர். தொடர்ச்சியான மின்னல் காரணமாக சில பகுதிகளில் மின்விநியோகத் தடங்கல்களும் ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்தனர். (அ)

## பௌத்த அமைச்சின்...

கலாசார மண்டபத்தினை புத்தசாசன அமைச்சின், நம்பிக்கை பொறுப்பு சபைக்குள் உள்வாங்கியமை பாரிய சந்தேகத்தை ஏற்படுத்துவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களின் கலாசார ரீதியான மற்றும் மத அடையாளங்களை அழிப்பதற்கும் திரிவுபடுத்துவதற்கும் புத்தசாசன அமைச்சே பிரதாக காரணமாக விளங்குவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அவ்வாறான அமைச்சின் கீழ் திருவள்ளுவர் கலாசார மண்டபம், உள்வாங்கியமை திட்டமிட்ட தமிழின அழிப்பு எனவும் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் குற்றம் சுமத்தியுள்ளார்.

எனவே, தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் கடந்த கால அரசாங்கங்களை விட மோசமான முறையில் தமிழின அழிப்பில் ஈடுபட்டு வருவதாகவும் இது குறித்து தமிழ் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டுமென கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

## வடமாகாணம் முழுவதும்...

கலந்துரையாடல்கள் மற்றும் கூட்டங்கள் ஏற்கனவே நடத்தப்பட்டுள்ளன.

எனினும், மீண்டும் மீண்டும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டும், கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டும், இதுவரை எந்த பயனுள்ள தீர்வும் வழங்கப்படவில்லை.

தற்போது நிலவி வரும் மணல் பற்றாக்குறை, முழு கட்டுமானத் துறையையும் கடுமையாக பாதித்துள்ளது.

அரசாங்க அபிவிருத்தித் திட்டங்கள்,

பொது உட்கட்டமைப்பு பணிகள் மற்றும் தனியார் துறை கட்டுமான நடவடிக்கைகள் பெரும் தாமதங்களையும் நிதி இழப்புகளையும் எதிர்கொண்டு வருகின்றன.

அதேவேளை, சட்டவிரோத மணல் விற்பனை மற்றும் மணல் மாபியா நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால், அநியாயமான விலை உயர்வுகளும், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் பொது மக்களுக்கும் கடுமையான சிரமங்கள் ஏற்பட்டுள்ளன-என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திற்கும், நியாயமான கட்டுப்பாட்டு மணல் விலையை நிர்ணயித்தல். மணலின் தொடர்ச்சியான மற்றும் வெளிப்படையான விநியோகம் மற்றும் பகிர்மானத்தை உறுதிசெய்தல்.

சட்டவிரோத மணல் விற்பனை மற்றும் ஏகபோக நடவடிக்கைகளை தடுக்குதல். இந்த விடயங்களுக்கு, இரண்டு வாரங்களுக்குள் தீர்வு வழங்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் நடைமுறை சார்ந்த தீர்வு எதுவும் வழங்கப்படாவிட்டால், வடக்கு மாகாண ஒப்பந்தக்காரர்கள் அனைவரும் இணைந்து, அரசாங்க கட்டுமானப் பணிகளை இடைநிறுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவார்கள் எனவும் இலங்கை தேசிய கட்டுமான சங்கத்தின் வடக்கு மாகாண கிளை குறிப்பிட்டுள்ளது. (அ)

# தேசிய மக்கள் சக்தி என்பது சட்டபூர்வமான அரசு அல்ல!

### சுதந்திரக் கட்சி சுட்டிக்காட்டு

கொழும்பு, மே. 16

தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எவ்வகையிலும் மக்கள் அங்கீகாரத்தைப் பெற்ற ஒரு சட்டபூர்வமான அரசாங்கம் அல்ல என்றும், கடந்த கால வன்முறை, கொள்ளை மற்றும் அரச சொத்து அழிப்பு போன்ற கறன்படிந்த வரலாற்றை மூடிமறைக்கவே இவர்கள் “திசைகாட்டி” என்ற புதிய சின்னத்தின் கீழ் அதிகாரத்தைக் கைப்பற்றினர் என்றும் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திசாநாயக்க தெரிவித்தார்.

பத்தரமுல்ல நெலும் மாவத்தையிலுள்ள பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற கூட்டு எதிர்க்கட்சிகளின் விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இக்குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்-

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் நாட்டு மக்களுக்கு வழங்கிய பொய் வாக்குறுதிகளைப் பட்டியலிட்டால், அதனைக் கொண்டு பல புத்தகங்களையே எழுத முடியும்.

அதிகாரத்தைப் பெற்ற பின்னர், கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்குப் பதிலாக, நாளாந்தம் புதிய பொய்களைக் கூறி மக்களை ஏமாற்றும் போக்கே தொடர்கிறது. “டித்வா“ புயல் அனர்த்தத்தின் போது பாராளுமன்றத்திற்கு வந்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, ஒரு கூரைத் தகடு சேதமடைந்திருந்தாலும் 10 இலட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்படும் எனக் கூறிய போதிலும் இதுவரை ஒருவருக்குமே அந்தப் பணம் கிடைக்கவில்லை.

நாட்டின் நீதித்துறை மீது எங்களுக்கு அசைக்க முடியாத மதிப்பும் நம்பிக்கையும் உள்ளது. கடந்த மே முதலாம் திகதி தொழிலாளர் தின மேடையில் ஜனாதிபதி அநுர குமார ஆற்றிய உரை நீதிமன்ற சுயாதீனத்தன்மை மீதான கடுமையான சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி கைதட்டுவதற்குத் தயாராக இருக்குமாறும், அன்றைய தினம் நீதிமன்றத் தீர்ப்பு ஒன்று வரவுள்ளதாகவும் ஜனாதிபதி அன்று பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

நீதிமன்றத்தில் சுயாதீன நீதிபதிகள் வழங்கும் தீர்ப்பு வெளிவருவதற்கு முன்னரே, அது குறித்து ஜனாதிபதிக்குத் தெரிந்திருக்கிறது என்றால், அவர் அந்த நீதிபதிக்கு ஏதேனும் அழுத்தம் கொடுத்திருக்க வேண்டும் அல்லது அந்த நீதிபதி தீர்ப்பை ஜனாதிபதிக்கு முன்கூட்டியே அறிவித்திருக்க வேண்டும் என்ற இரு காரணங்களைத் தவிர வேறு எதுவும் இருக்க முடியாது-என்றார். (அ)

## ஓகஸ்ட் மாதம்

காலப்பகுதிக்கான எரிபொருள் தேவையை விநியோகிப்பதற்கான கோரிக்கைகளும் ஏற்கனவே விடுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அரசு சேவைகளை முறையாக முன்னெடுத்துச் செல்வது தொடர்பாக அமைக்கப்பட்ட குழுவின் ஆறாவது கூட்டம் நேற்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தலைமையில் நடைபெற்றபோதே அதிகாரிகள் இத்தகவல்களை வெளியிட்டனர்.

இந்தக் கூட்டத்தின்போது எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் மற்றும் ஆலோசனைகள் வருமாறு:

தற்போது நடைமுறையிலுள்ள வாகன இலக்கத் தகடுகளின் ஒற்றை மற்றும் இரட்டை முறையை நீக்குவது குறித்து அவதானம் செலுத்தப்பட்டது.

முற்றிலும் கியூ.ஆர். குறியீட்டின் கீழ் மாத்திரம் எரிபொருளை வழங்குவதற்கும், தற்போதுள்ள எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

‘கிளீன் சிறீலங்கா’ திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்கள் ஊடாக மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் மின்சாரத்தை நிலையான முறையில் சேமிக்கும் வீடுகளைத் தெரிவு செய்து மாணவர்களை மதிப்பீடு செய்தல் போன்ற திட்டங்கள் முன்மொழியப்பட்டன.

எதிர்கால கட்டுமானத் திட்டங்களின் போது ‘பசுமை கட்டடம்’ எனும் புதிய சூழல்நேய எண்ணக்கருவை அறிமுகப்படுத்துவது தொடர்பாகவும் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. (அ)

## இழுவை படகு...

பாக்கு நீரிணையில் நீண்ட காலமாகத் தொடரும் கடற்றொழிலாளர் பிரச்னைகளுக்குப் பேச்சுவார்த்தைகள் மற்றும் இராஜதந்திர வழிகள் ஊடாகத் தீர்வு காணத் தாம் விரும்புவதாக அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழக முதலமைச்சர் சி. ஜோசப் விஜய்யைச் சந்தித்துப் பேசுவதற்காகத் தாம் விரைவில் தமிழ்நாடு செல்ல விரும்புவதாக அவர் குறிப்பிட்டார். இந்தப் பேச்சுவார்த்தைகள் மூலம் இலங்கை மற்றும் இந்தியத் தமிழ் கடற்றொழிலாளர்களுக்கு இடையிலான முரண்பாடுகளைக் களைந்து, இருதரப்புக்கும் சாதகமான தீர்வை எட்ட முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட் டார். (அ)

## பொய்யான தரவுகள்...

அம்பாந்தோட்டை மாவட்ட அதிகரன சங்க நாயகர் போகஹபலஸ்ஸே சோமிஸ்ஸர தேரரை நேற்று சந்தித்து ஆசி பெற்ற பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2026 மார்ச் மாத உத்தியோகபூர்வ தரவுகளின்படி, இந்நாட்டில் ஒரு நபர் ஒரு மாதத்திற்கு வாழ்வதற்கு ரூ.16,990 போதுமானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல் கொழும்புக்கு ரூ.18,000, கம்பஹாவிற்கு ரூ.17,908 மற்றும் களுத்துறைக்கு ரூ.17,520 போதுமெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

நாளுக்கு நாள் ரூபா மதிப்பிழந்து வரும் வேளையில், இந்த சொற்ப தொகையை வைத்துக்கொண்டு ஒரு நபர் எவ்வாறு 30 நாட்களுக்கு உணவு மற்றும் இதர தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும்?

இத்தகைய தவறான தரவுகளைக் கொண்டே அரசாங்கம் வறுமைக் கோட்டைத் தீர்மானித்து, சலுகைகளை வழங்கி வருகிறது.

நாட்டின் 30 வீதம் முதல் 40 வீதம் வரையான மக்கள் கடுமையான வறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். பலருக்கு முறையான தங்குமிடமோ, நிலையான வாழ்வாதாரமோ இல்லை.விவசாயிகள், கடற்றொழிலாளர்கள் , தொழிலாளர்கள் மற்றும் கிராமப்புற, நகர்ப்புற, தோட்ட மக்கள் மட்டுமன்றி, நடுத்தர மற்றும் உயர் நடுத்தர வர்க்கத்தினரும்கூட இந்த பொருளாதார அழுத்தத்தின் வலியை அனுபவித்து வருகின்றனர். எனவே, வெறுப்பு அரசியலையும் பகைமையையும் கைவிட்டு, நாட்டின் 220 இலட்சம் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு அரசாங்கம் மனிதாபிமானத்துடன் விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்-என்றார். (அ)

## யுத்தக் குற்றவாளிகள்...

யாழ்ப்பாணத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த மண்ணில் இடம்பெற்ற ஈழ விடுதலைப் போராட்டம் காரணமாக உயிரிழந்த மக்களை நினைவு கூரும் வகையில் முன்னெடுக்கப்படும் நிகழ்வுகளிலும் பங்குபற்ற வேண்டும் என்ற ஆலோசனை எங்கள் தலைமையினால் எங்கள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

ஈழ விடுதலைப் போராட்டம் காரணமாக உயிரிழந்த அனைவரும் நினைவு கூரப்பட வேண்டியவர்கள்.

அதற்கான பொதுவான தினம் நிர்ணயிக்கப்பட்டு அனைவரும் நினைவு கூரப்படவேண்டும் என்ற தனிநபர் பிரேரணை கூட பாராளுமன்றில் எமது செயலாளர் நாயகத்தினால் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

அந்த அடிப்படையில், இந்த நாட்டில் இறுதி யுத்தம் இடம்பெற்றபோது, முள்ளிவாய்க்கால் பகுதியில் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்திருக்கின்றார்கள். அவர்கள் அனைவரும் நினைவு கூரப்படவேண்டியவர்கள்.

உயிரிழந்தவர்களின் உறவுகளுக்கு, உயிரிழந்த தங்கள் உறவுகளை நினைவு கூருவதற்கு முழுமையான உரிமை இருக்கின்றது என்பதையும் நாங்கள் வலிறுத்துகின்றோம்.

அதேவேளை, இறுதி யுத்தத்தின்போது, யுத்தக் குற்ற மீறல்கள் இடம்பெற்று இருக்கின்றன. யுத்த குற்ற மீறல்களில் இரண்டு தரப்பினரும் ஈடுப்பட்டிருக்கின்றனர் என்பதை, சர்வதேச நிபுணர் குழுவின் தருஸ்மன் அறிக்கை போன்ற பல்வேறு அறிக்கைகள் உறுதிப்படுத்துவதுடன், அந்த பிரதேசத்தில் இருந்து தப்பி வந்த மக்களும் வெளிப்படுத்துகின்றனர் என்ற அடிப்படையில் யுத்த குற்றம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும் என்பதையும் தொடர்சியாக வலியுறுத்தி வருகின்றோம்.

ஆனால் எங்கள் மக்களுக்கு எந்தவிதமான நன்மைகளை பெற்றுக்கொடுக்காத, எமது மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கான தற்போதைய அரசியல் தீர்வு முயற்சிகளுக்கு இடையூறாக அமையக்கூடிய சொல்லாடல்களை முன்வைத்து முன்னெடுக்கப்படுகின்ற அரசியல் நலன்களை முன்னிறுத்திய அஞ்சலி நிகழ்வுகளில் கலந்து கொண்டு கீழ்த்தரமான அரசியலை முன்னெடுக்க வேண்டிய தேவை எமக்கு கிடையாது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# காணி, பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த அதிகாரப் பகிர்வுக்கு நாங்கள் தயார்!

## பொதுஜன பெரமுன திட்டவட்டம்



கொழும்பு, மே. 16

மாகாண சபைத் தேர்தல் குறித்து சகல தரப்பினருடனும் வெளிப்படையான பேச்சுக்குத் தயாராகவுள்ளோம். ஆனால், காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைத் தவிர்ந்த ஏனைய அதிகாரப் பகிர்விலேயே எமக்கு உடன்பாடு உண்டு என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் குறித்து ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாகாண சபைத் தேர்தலை நடத்தவேண்டும் என்பதில் எமது கட்சி உறுதியாக உள்ளது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, வடக்கு - கிழக்கில் தோல்வி உறுதியெனத் தெரிந்தும் தமிழ் மக்களுக்கு அரசியல் தலைமைத்துவத்தை வழங்கத் தேர்தலை நடத்தினார்.

2017ஆம் ஆண்டு எல்லை நிர்ணய அறிக்கை ஊடாக மாகாண சபைத் தேர்தலைக் காலவரையறையின்றிப் பிற்போட மைத்திரி-ரணில் தலைமையிலான நல்லாட்சி அரசு நடவடிக்கை எடுத்தது. இதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஜே.வி.பியும் ஒத்துழைப்பு வழங்கின.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின்படி காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்வது நாட்டில் வீண் பிரச்னைகளையே ஏற்படுத்தும். எனவே, இவ்விரு அதிகாரங்களைத் தவிர்த்து ஏனையவற்றைச் சகல மாகாணங்களுக்கும் பகிர்வதில் எமக்கு எவ்விதப் பிரச்னையும் இல்லை.

தேர்தல் முறைமை குறித்து ஆராய நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற விசேட செயற்குழு, நிர்ணயிக்கப்பட்ட மூன்று மாத காலத்துக்குள் அறிக்கையைச் சமர்ப்பிக்கும் என்பதில் எமக்கு நம்பிக்கை இல்லை.

மாகாண சபைத் தேர்தலின் ஊடாக மக்களின் அடிப்படைப் பிரச்னைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே தமது கட்சியின் இறுதி நிலைப்பாடு - என்றார். (அ)

### நீதிமன்ற அவமதிப்பு:

# தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளருக்கு 6 ஆண்டு வருட சிறை

கொழும்பு, மே. 16

2024ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பில் உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை நடைமுறைப்படுத்தத் தவறியதன் மூலம், நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளர் ஐ.ஜி.எஸ். பிரேமதிலக்கவுக்கு உயர் நீதிமன்றம் கடுமையான தண்டனையை வழங்கியுள்ளது.

குற்றவாளியாகக் காணப்பட்ட ஐ.ஜி.எஸ். பிரேமதிலக்கவுக்கு 6 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அவருக்கு 3 மில்லியன் ரூபா (30 இலட்சம்) அபராதம் விதிக்கப்பட்டது.

இந்த அபராதத் தொகையைச் செலுத்தத் தவறினால், மேலதிகமாக ஓராண்டு சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும் எனவும் நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய கட்டளையைச் செயற்படுத்தத் தவறியதன் மூலம், அவர் நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாகக் கூறி அவருக்கு எதிராகக் குற்றச்சாட்டுகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

பிரதம நீதியரசர் பிரிதி பத்மன் சூரசேன உள்ளிட்ட மூவர் கொண்ட உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாமினால் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது. (அ)

# குமுதினி படகு படுகொலையின் 41ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு



யாழ்ப்பாணம், மே. 16

குமுதினி படகில் வைத்து படுகொலை செய்யப்பட்டவர்களின் 41ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு நெடுந்தீவில் அமைந்துள்ள நினைவிடத்தில் நேற்று உணர்வுபூர்வமாக நினைவு கூரப்பட்டது.

கடந்த 1985ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி காலை பல்வேறு தேவைகளுக்காகவும் நெடுந்தீவு மாவிலித்துறையில் இருந்து குறிகாட்டுவான் நோக்கி குமுதினி படகில் பயணித்த பச்சிளம் குழந்தை உட்பட 36 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

நேற்று காலை 9.15 மணிக்கு நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவினரின் ஏற்பாட்டில் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

நிகழ்வில் வேலன் சுவாமி, நெடுந்தீவு பங்குத்தந்தை, பிரதேச சபை தவிசாளர், உறுப்பினர்கள் கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர் சன்முகராஜா .ஜீவராஜா உள்ளட்ட அரசியல் பிரதிநிதிகள் மதத் தலைவர்கள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, நேற்று காலை 8.30 மணிக்கு நெடுந்தீவு மாவிலித்துறை வீரபத்திரப்பிள்ளையார் ஆலயம், நெடுந்தீவு மாவிலித்துறை சவேரியார் ஆலயம், நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபை ஆலயம், மற்றும் நெடுந்தீவு தேவசபை ஆலயம் என்பவற்றில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளின் ஆத்மா சாந்திக்கான வழிபாடுகளும் நடைபெற்றுள்ளன. (அ)




# தமிழ்நாட்டுத் தேர்தலில் வாக்களித்த இலங்கையர்!

சென்னை, மே. 16

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் போலி ஆவணங்களைப் பயன்படுத்திச் சட்டவிரோதமாக வாக்களித்ததாகக் கருதப்படும் 17 வெளிநாட்டு கடவுச்சீட்டு வைத்திருப்பவர்களை குடிவரவு அதிகாரிகள் தடுத்து வைத்துள்ளனர். அவர்களில் ஒருவர் இலங்கையர்.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைக்காகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில நாள்களில் சென்னை வானூர்தி நிலையத்தில் கனடா, இலங்கை மற்றும் அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளுக்குத் திரும்ப முயன்ற 15 பேர் அதிகாரிகளால் இடைமறிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் இருவர் மதுரை வானூர்தி நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் கனடா குடியுரிமை பெற்ற ஜிதேந்திரநாத், அவுஸ்திரேலிய குடியுரிமை பெற்ற சந்திரசேகர ரகுபதி மற்றும் இலங்கையைச் சேர்ந்த ஒருவர் என மொத்தம் 3 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடவுச்சீட்டுப் பரிசோதனையின்போது இவர்களின் விரல்களில் இருந்த அழியாத தேர்தல் மையைக் கண்ட அதிகாரிகள், இவர்களைத் தடுத்து நிறுத்தி தமிழ்நாடு பொலிஸாரின் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சென்னை பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன், முதற்கட்ட விசாரணையில் இருவர் பெரம்பூர் மற்றும் கே.கே. நகர் தொகுதிகளில் வாக்களித்திருக்கலாம் எனத் தெரியவந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ)

# மதுவரி பாதுகாப்பு முத்திரை அச்சிடுதலை தகுதியற்ற நிறுவனத்துக்கு வழங்க முயற்சி

## நிதி அமைச்சு மீது தொழிற்சங்கங்கள் குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 16

மதுபான உற்பத்திகளுக்கான பாதுகாப்பு முத்திரைகளை அச்சிடும் விலைமனுவை , சர்வதேச அனுபவமோ அல்லது தகுதியோ இல்லாத நிறுவனமொன்றிற்கு வழங்குவதற்கு நிதி அமைச்சு தயாராகி வருவதாக மதுவரித் திணைக்களத்தின் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

பாதுகாப்பு முத்திரைகளை அச்சிடுவதற்கான விலைமனு நடைமுறைகளை ஆரம்பிப்பதற்கு கடந்த வாரம் அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.

இதனைத் தொடர்ந்து, கொள்முதல் அளவுகோல்களை தயாரிக்கும் பணிகளை மதுவரித் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

எனினும், திணைக்களத்தில் உள்ள சில அதிகாரிகள், தகுதியற்ற ஒரு நிறுவனம் இந்த ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்ளும் வகையில் கொள்முதல் தேவைகளை தங்களுக்கு சாதகமாக மாற்றியமைக்க முயற்சிப்பதாக தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இந்த முயற்சிக்கு நிதி அமைச்சின் சில அதிகாரிகளும் ஆதரவளித்து வருவதாக அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே, நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி இதில் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் குற்றச்சாட்டுகளை முற்றாக நிராகரித்துள்ள மதுவரி ஆணையாளர் நாயகம் எம்.பி.என்.ஏ. பிரேமரத்ன, எந்தவொரு குறிப்பிட்ட நிறுவனத்திற்கும் சாதகமாக விலைமனு அளவுகோல்கள் வடிவமைக்கப்படமாட்டாது எனத் தெரிவித்துள்ளார். (அ)

# வடமாகாண ஆசிரியர்கள் இடமாற்றம் ஆளுநர் அலுவலகம் முன் போராட்டம்!



யாழ்ப்பாணம், மே. 16

வடக்கு மாகாணத்தில் ஆசிரியர் இடமாற்றங்கள் தொடர்பாக ஏற்பட்டுள்ள சர்ச்சையை முன்னிறுத்தி, வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மாகாண கல்வித் திணைக்களம் ஆசிரியர்களின் இடமாற்ற கோரிக்கைகளை உரிய முறையில் பரிசீலிக்காமல் மீண்டும் மீண்டும் ஒரே ஆசிரியர்களுக்கே இடமாற்றங்களை வழங்க தீர்மானித்துள்ளதாக குற்றஞ்சாட்டி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தில் கலந்துகொண்ட ஆசிரியர்கள் பலர் பதாகைகள் ஏந்தி கோசங்கள் எழுப்பியதுடன், தங்களது கோரிக்கைகளுக்கு நீதி வழங்கப்படவேண்டும் என வலியுறுத்தினர்.

இதில் கருத்து தெரிவித்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபசெயலாளர் தீபன் தீலீசன்-

ஏற்கனவே கஷ்டப் பிரதேசங்களில் நீண்ட காலம் பணியாற்றிய ஆசிரியர்கள், உடல்நலக் குறைபாடுகள் கொண்டவர்கள் மற்றும் குடும்ப சூழ்நிலைகளால் தூரப் பகுதிகளுக்குச் செல்லமுடியாதவர்களே மீண்டும் மீண்டும் கஷ்டப் பிரதேசங்களுக்கு அனுப்பப்படுவதாக குற்றம் சாட்டினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.05.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media